புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# மெய்ப்பொருள் நாயனாரின் பக்தியும் கருணை மாண்பும்

***கட்டுரையாளர்***
***முனைவர். இரா.அ.அனிதா,***
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637 002.*

***ஆய்வுச் சுருக்கம் :***

*நன்னெறிப்படுத்தி அவர்கள் நலமுடன் வாழ வழிவகை செய்வதற்காக உருவாக்கப்பட்டவையே வேதங்களும், புராணங்களும் ஆகும். வேதங்கள் என்பது இறைவனின் அருள் தன்மையை வெளிப்படுத்துவதாகவும் புராணங்கள் என்பது இறைவனின் அருட்செயலை கதையாக வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது. புராணங்களாகக் கருதப்படுகின்ற திருவிளையாடல் புராணம், கந்தபுராணம் போன்றவை இறைவனின் அருட்செயல்களை மட்டும் கதை வடிவில் கூறுவனவாக அமைந்துள்ளது. ஆனால் பெரியபுராணமோ இறைவனின் அருட்செயலை கதை வடிவில் வெளிப்படுத்துவதோடு மட்டும் நிற்கவில்லை. அது சைவ சமயத்தின் பெருமையையும், சிறப்பையும் எடுத்தோதுகின்ற சைவசமயப் பெரியோர்களின் வாழ்வியல் முறைகளையும் அவர்கள் இறைவனிடமும் இறைவனை அனுதினமும் மனத்துள் எண்ணி பூசிக்கின்ற அடியவர்களிடமும் கொண்ட மேலான பக்தியையும் அன்பையும் கூறுவதாக அமைந்திருக்கிறது. இத்தகைய புண்ணிய சான்றோர்களின் வரிசையில் இடம்பெற்றவர்தான் மெய்ப்பொருள் நாயன்மார் ஆவார். இவர் எதிரிக்கும் நன்மை செய்திடும் நன்னெறி கொண்டவராவார். இத்தகைய நற்பண்பாளரின் வாழ்வை இறைபக்தி உடையவர்களுக்கு நல்லதொரு சான்றாக்கிட வேண்டும் என்பதைற்காவே இக்கட்டுரை எடுத்தியம்பப்பட்டுள்ளது.*

***முன்னுரை :***

*அன்புள்ளம், நன்மை, தீமை அறிதல், நல்லன செய்தல் ஆகியன மேன்மக்கள் செயலாகும். பொய், சினம், பொறாமை ஆகியன கீழ்மக்கள் செயலாகும். மேன்மக்களுக்குண்டான மேன்மைகளைப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரே வானுறையும் தெய்வத்துள் ஒன்றாக வைக்கப்படுவார். இறைவனை அடைய வேண்டுமெனின் வெறுமனே பூசைகள் செய்தும் ஆலயத் திருப்பணிகளை செய்தும் வாழ்ந்தால் மட்டும் போதாது. அனுதினமும் அவன் தாள் சார்ந்து அவன்மீது பக்தியையும் பிறர்மீது அன்பையும் காட்டி வாழ்ந்திடுதல் வேண்டும். அன்புடைய மேன்மக்கள் தம் தலைமீது அமரும் சிற்றினமான ஈக்களின் மேல் கோபங்கொண்டு அதை கொல்வதில்லை. இம்மேம்பட்டப் பண்பைப் பெற்ற மெய்ப்பொருளார் தம்மை கொல்லும் பொருட்டு கத்தியால் குத்திய முத்தநாதனை கொல்லாமல் விட்டதோடு அவனை பிறர் தாக்காதவாறு காக்குமாறு தம் காவலர் தத்தனிடம் உரைத்திட்டப் பாங்கு வியக்கத்தக்கது. இம்மேம்பாடுடைய மெய்ப்பொருளாரின் பக்தி மாண்பும் இறைப்பண்பாடும் அன்பு, கருணை ஆகியவற்றின் மேன்மையும் போற்றுதலுக்குரியதாகும்.*

***நாயன்மார்கள் :***

*பண்டைக்காலந்தொட்டே தமிழ்மக்களிடம் இறைவழிபாடு என்னும் முறை வழக்கத்தில் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட கொள்ளையை ஏற்றுக்கொண்டு அக்கொள்கையிலிருந்து மாறுபடாமல் தங்களை நிலைநிறுத்தியவர்கள் தான் நாயன்மார்கள். இவர்கள் சைவ சமயக் கடவுளான சிவனையே முழுமுதல் கடவுளாகக் கொண்டு தங்கள் வாழ்வின் பெரும்பங்கை சைவத்திற்கும் சிவனுக்குத் தொண்டு செய்வதிலுமேயே அர்ப்பணித்திட்ட உத்தமர்களாய் விளங்கினார்கள். "இவர்கள் இறை வழிபாட்டை முறையாகப் பின்பற்றி இறைவனைப் பாடி துதித்து அவனருள் பெற வேண்டி இறைவனின் தூதுவர்களாகப் அனுப்பப்பட்டுள்ளனர்" [1] என்கிறார் ந.தனபால்.(திருமுறைகளில் பொதுமறை சில துளிகள்... - ந.தனபால், செல்லம் பதிப்பகம், 119/6 புரசைவாக்கம் நெடுஞ்சாலை செல்லீஸ், சென்னை ப - , பதிப்பு - சூன் 2020). இவ்வாறு அனுப்பப்பட்ட நாயன்மார்கள் பலர் தாம் செய்திடும் செயல்கள் யாவும் தாமாகவே செய்கின்ற செயல்கள்தாம் என எண்ணுவதில்லை. மாறாக அச்செயல்கள் யாவும் இறைவன் தங்களுக்கு கொடுத்த வரம் என்பதாகவே எண்ணி செய்கின்றனர்.*

***பெரியபுராணம் :***

*சைவசமயத் திருமுறைகளில் பன்னிரண்டாவது திருமுறையாக் தொகுக்கப்பெற்ற நூல் பெரியபுராணமாகும். இந்நூலின் ஆசிரியர் சேக்கிழார் ஆவார். இந்நூல் இறைவனைப் பற்றி பாடவில்லை, மனிதர்களைப் பற்றியும் பாடவில்லை, இறைவனை உள்ளத்துள் எழுந்தருளச் செய்து அவனுடன் உறவாடிக் கொண்டிருக்கும் அடியவர்களைப் பற்றிப் பேசுகின்றது. சாதாரண மக்களைக் காட்டிலும் பெரியவர்களாக மேம்பட்டு வாழ்ந்தவர்களே அடியார் என்ற உண்மையை எடுத்தோதும் விதமாக இந்நூல் அமைந்துள்ளது என்பதை,*

**"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்**

***கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி***

***வீடும் வேண்டா விறலின் விளங்கினார்”*** [2]

*(பெரியபுராணம் - திருமலைச் சருக்கம் - திருக்கூட்டச்சிறப்பு - 8)*

*எனும் பாடலைக் கொண்டு தெரிந்து கொள்ள முடிகிறது.*

*அறுபத்துமுன்று நாயன்மார்களில் ஒருவரும் பெரியபுராணத்தின் நாயகருமான சுந்தரர் ஒவ்வொரு அடியிலம் ஒவ்வொரு அடியவரைப் பற்றிக் குறிப்பிட்டு* ***‘திருத்தொண்டத் தொகை’*** *என்றப் பெயரில் ஒரு நூலை எழுதினார். நம்பியாண்டார் நம்பி ஒவ்வொரு அடியவருக்கும் ஒவ்வொரு பாடல் என்றவாறு அமைத்து* ***‘திருத்தொண்டர் திருவந்தாதி’*** *என்றப் பெயரில் ஒரு நூலை எழுதினார். சுந்தரர் பாடிய தொகை நூலையும் நம்பியாண்டார் நம்பி பாடிய வகை நூலையும் விரித்துச் சேக்கிழார் ஒவ்வொரு அடியவருக்கும் ஒவ்வொரு புராணம் அமைத்திட்டு* ***‘பெரியபுராணத்தை’*** *இயற்றினார். இப்பெரியபுராணத்தைச் சேக்கிழார்* ***‘எடுக்கும் மாக்கோதை’*** *எனவும்* ***‘திருத்தொண்டர் பராணம்’*** *எனவும் குறிப்பிடுகின்றார். வாழ்வாங்கு வாழ்வு வாழ்ந்த அடியவர்களின் வரலாற்றைக் கூறுவதால் இப்பெரியபுராணத்தை ஒரு வரலாற்று நூல் என்றே கூறலாம். “பழந்தமிழகத்தில் விளங்கிய நாடுகளில் - பல ஊர்களில் - பல இனங்களில் வாழ்ந்த அடியவர்களின் சிறப்பைக் கூறுவதால் இதை தேசிய ஒருமைப்பாட்டு இலக்கியம் எனக் கூறலாம்”* [3] *என்கிறார் புலவர்அ.கி.அழகர்சாமி (பெரியபுராணம் எளிய நடையில் - கற்பகம் புத்தகாலயம், 4/2, சுந்தரம் தெரு, தி.நகர், சென்னை - 17 SEP 2018)*

***சைவசமயம் :***

*சைவசமயம் அன்பையும் அருளையும் அடிப்படையாகக் கொண்டது. மக்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடியது. அவர்களது வாழ்வினை மேன்மையுறச் செய்யும் வழிபாட்டு நெறியை உடையது. அன்பும் அருளும் சமயத்தின் மேன்மையை உணர்த்தும் என்பதை,*

***“அருட்பெருகுந் தனிக்கடலும் உலகுக்குக் கெல்லாம் அன்பு செறிகடலும்”*** [4]

*(பெரியபுராணம் - திருநாவுக்கரசர் புராணம் - 185)*

*எனும் சேக்கிழாரின் கூற்றைக் கொண்டு அறியலாம். சைவப் பெரியவர்கள் அன்பையும் சிவனையும் ஒன்றே எனக் கருதி பிறர்மீது அன்பு காட்டுவது சிவனை அடையும் சிறந்த நெறி எனும் சமயப் பண்பாட்டைப் பெற்றவர்களாய் வாழ்ந்தனர். வள்ளலாரும்,*

***“அன்பெனும் பிடியுள் அகப்படுமலையே***

***அன்பெனும் குடில் புகும் அரசே”*** [5]

*(திருவருட்பா - ஆறாம் திருமுறை - பரசிவ வணக்கம் - 3269)*

*என அன்புடையவரே ஆண்டவனை அடைய முடியும் எனத் தம்முடைய திருவருட்பாவில் கூறியுள்ளார்.*

***மெய்ப்பொருள் நாயனார் :***

*சேதிநாட்டில் திருக்கோவிலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த மன்னர்தான் மெய்ப்பொருளார். இவர் திருநீறு பூசி சிவனடியார் வேடம் பூண்ட யாவராயினும் அவரைத் தம் சிந்தையில் ஏற்றுத் தொழும் வழக்கமுடையவராக வாழ்ந்தார். தான் வாழ்ந்த சேதிநாடு எங்கும் சிவ ஆலயங்கள் அமைத்து அவ்வாலயங்களில் நாள்தோறும் பூசைக்கு வேண்டிய யாவற்றையும் வழங்கி சிவப்பணியைச் சிறப்புடன் செய்திட்ட சிவபக்தராக விளங்கினார். இதனை,*

***"மங்கையைப் பாகமாக வைத்தவர் மன்னுங் கோயில்***
***எங்கணும் புசைநீடி ஏழிசைப் பாடலால்***
***பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்..."*** [6]

*(பெரியபுராணம் - மெய்ப்பொருள் நாயனார் புராணம் : 3)*

*எனும் பெரியபுராணம் பாடல் வழி அறியலாம்.*

*சிவவேடம் கொண்ட அன்பர்களுக்குத் தொண்டு செய்து வரும் நாளில் இவருடன் பகை கொண்ட முத்தநாதன் எனும் மன்னன் மெய்ப்பொருளாரோடுப் பலமுறைப் போர் செய்ய வந்தான்.*

***"முன்னலிந் தாற்ற முரண்கொண்டு எழுந்தோரைப்***
***பின்னலிது மென்றிருத்தல் பேதைமையே….."*** [7]

*(பழமொழி நானூறு - 288)*

*எனப் பழமொழி நானூறில் கூறியருப்பதைப்போல தன் மீது பகை கொண்டு தன்னைத் தாக்கும் பொருட்டும் தன்னைத் தோற்கடிக்கும் பொருட்டும் தன்னிடம் போர் தொடுத்து வந்த முத்தநாதனை பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணி சும்மா விடாமல் அவனின் செருக்கை மெய்ப்பொருளார் அடக்கினார். மெய்ப்பொருளாரோடு பகை கொண்டு பலமுறையும் போர்தொடுத்து வந்த முத்தநாதன் தோல்வியுற்றுத் திரும்பினான்.*

***முத்தநாதனின் பொய்த்தவ வேடம் :***

*அல்லும் பகலும் அவன்தாள் சார்ந்து வாழும் அடியவர்களுக்கெல்லாம் 'மெய்ப்பொருள்' என்பது அவர்கள் தங்கள் மேனியிலணிந்த திருநீறும் அவர்கள் களிப்பிற்காக அணியும் அணிகளுமே ஆகும். சிவனாகிய இறைவனை ஆன்ம நேயத்தோடு அணுகி அறம் தரித்து உலவும் அடியவர்களை சிவபெருமான வரம் கொடுத்து காப்பாற்றுவார்; எனக் கூறிடும் சிவனடியார்கள் எல்லாரும் சிவனின் மறுவடிவம்தான் என மனதில் நினைத்து வாழும் சிவபக்தர்கள் பலருண்டு. அவ்வரிசையில் நின்ற பெருமைக்குரியவர் மெய்ப்பொருள் நாயன்மாராவார். ஆகவே மெய்ப்பொருளாரை வஞ்சனையால் கொல்ல விரும்பிய முத்தநாதன் திருநீறு பூசிய மேனியுடனும் கையில் சுமந்த ஏட்டுச்சுவடிகளில் மறைத்து வைத்த வாளுடனும் சிவனடியார் போன்று வேடமிட்டு மெய்ப்பொருளாரின் சேதிநாட்டை அடைந்து அவரது அரண்மனையினுள் நுழைந்தான்.*

***முத்தநாதனின் கீழ்மைக் குணம் :***

சிவவேடம் பூண்டிருந்ததால் அரண்மனைக் காவலர்களும் அக்கொடிய வஞ்சகன் முத்தநாதனை சிவவேடம் பூண்ட சிவனடியார் எனக் கருதி அரண்னைக்குள் அனுமதித்தனர். முத்தநாதனும் எவ்வித தங்குதடையுமின்றி அரண்மனைக்குள் நுழைந்தான். சிவவேடம் தரித்துக் கொண்டு தான் செய்யவிருக்கும் தீச்செயலை எண்ணி சிறிதும் அச்சமின்றி இருந்தான். அவ்வேளையில் அவனது எண்ணம், செயல், நெஞ்சம் அனைத்தும் நஞ்சாகவே இருந்தது. தேனீ, தும்பி, குழவி ஆகிய ஈ வகைகளுக்கெல்லாம் அதன் கொடுக்கில்தான் நஞ்சு இருக்கும். பாம்புக்கு பல்லில் மட்டும்தான் நஞ்சு இருக்கும். ஆனால் முத்தநாதனோ தன் உடல் முழுதும் பகை எண்ணும் நஞ்சை வளர்த்துக் கொண்டிருந்தான். முத்தநாதனைப் போன்ற கெட்ட குணம் கொண்ட கீழ்மக்களின் செயலும் எண்ணமும் நஞ்சுடையதாகத்தான் இருக்கும் என்பதை,

**"ஈக்கு விடந்தலையில் எள்துமிருந் தேளுக்கு**
**வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே - நோக்கரிய**
**பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துஞ்சனாருக்கு**
**அங்கம்முழு தும்விடமே யாம்"** [8]

*(நீதி வெண்பா - 18)*

எனும் பாடல் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

முத்தநாதன் எளிமையாக அரண்னைக்குள் நுழைந்தாலும் அரசர் மெயப்பொருளாரின் அறையை அவனால் எளிமையாக அடையமுடியவில்லை. காரணம் அரசர் துயில் கொள்ளும் நேரமாதலால் சிறிது நேரம் பொறுத்திருந்து பிறகு சந்திக்கலாம் எனக் கூறி அரசரின் அறையை அடையமுடியாதவாறு தத்தன் என்பவன் அவனைத் தடுத்து நின்றான். அவனையும் மீறிச் சென்ற முத்தநாதன் மெய்ப்பொருளார் இருந்த அறையினுள் நுழைந்தான். முத்தநாதனைப் பார்த்த அரசியார் விரைந்து எழுந்து உறங்கிக் கொண்டிருந்த மன்னர் மெய்ப்பொருளாரை எழுப்பினாள். துயில் நீங்கிய மெய்ப்பொருளார்

**"அண்டர் நாயகர் தெண்டராம்எனக் குவித்த செங்கை**
**கொண்டு எழுந்து எதிரே நென்று கொள்கையின் வணங்கி நின்று"** [9]

*(பெரியபுராணம் - மெய்ப்பொருள் நாயனார் புராணம் : 11)*

எனத் தேவர்க்கும் தேவரான சிவபெருமானின் அடியவர் இங்கு வந்தார் என்று தலைமீது கைக்கூப்பியபடி எழுந்து முத்தநாதனின் எதிரே சென்று அவனை முறைப்படி வணங்கி நின்றார். அடியவர்களை அணுகுவது அல்லது அடியவர்கள் தம்மை அணுகுவது சிவன் தங்களுக்கு அளித்த பாக்கியம் என்று மெயப்பொருளார் கருதினார். ஆகவே அவரை முறைப்படி வரவேற்று வணங்கினார். மேன்மக்கள் என்றுமே அடக்கம் கொண்டு வாழ்வர். அவர்கள் கற்றறிந்தோருக்கு மதிப்பளித்து பணிந்து கிடப்பர் என்பதனை,

**"பணியுமாம் என்றும் பெருமை..."** [10]

*(திருக்குறள் - 978)*

*எனும் திருக்குறள் வழி அறியமுடிகிறது.*

***முத்தநாதனின் சூழ்ச்சியும் மெய்ப்பொருளாரின் பக்தியும் :***

*சிவனடியார் வேடத்தில் இருந்த முத்தநாதனிடம் இவ்விடம் இவ்வேளையில் வந்த காரணம் யாது எனப் பணிந்து கேட்ட மெய்ப்பொருளாரிடம் தான் எங்கும் கிடைக்காத சிவ ஆகமம் கற்பிக்க வேண்டும் என்றான். ஆகமத்தை கற்க தனித்திருத்தல் வேண்டும் எனவும் கூறினான். முத்தநாதனின் சூழ்ச்சியை அறியாத மெய்ப்பொருளார்*

***"திருமக ளென்ன நின்றதேவியார் தம்மை நோக்கிப்***
***புரவுடன் விரைய அந்தப் புரத்திடப் போக ஏவித்…"*** [11]

*(பெரியபுராணம் - மெய்ப்பொருள் நாயனார் புராணம் : 14)*

*திருமகள் போன்ற தம் மனைவியைப் பார்த்து அந்தப்புரத்திற்குச் செல்லும்படி பணித்தார்.*

*மெய்ப்பொருளாருக்கு ஆகமத்தைக் கூறுவான்போல் தான் கொண்டு வந்த கொல்லும் வாளினை மறைத்து வைத்த ஏட்டினை அவிழ்த்து தான் வந்த காரியத்தை முடிக்கும் பொருட்டு அவரை வாளால் குத்தினான்.*

***"தின்ன வரும் புலி தன்னையும் அன்போடு***
***சிந்தையில் போற்றிடுவாய் - நன்னெஞ்செ!…"*** [12]

*(பாரதியார் கவிதைகள் - பாப்பா பாட்டு - 6)*

*பகைவனுக்கும் அருள்வாய் நன்னெஞ்சே எனப் பாரதியார் கூறியுருப்பதைப் போல முத்தநாதன் தன்னை வாளால் குத்திய போதும் கூட,*

***"…மெய்த்தவ வேட மேமெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்"*** [13]

*(பெரியபுராணம் - மெய்ப்பொருள் நாயனார் புராணம் : 15)*

*உண்மையான தவவேடமே மெய்ப்பொருளாகும் எனக் கூறினார். எதிரியாக இருந்தாலும் சிவவேடம் அணிந்தவர்கள் சிறுபிழையும் செய்யமாட்டார்கள் என்ற அதீத நம்பிக்கை அவருக்குள் இருந்திருக்கிறது. சிவநெறியில் வாழ்பவர்கள் எங்கும் போற்றப்பட வேண்டும். அவர்களுக்கு எங்கும், எப்பொழுதும், யாராலும், எவ்விதத் தடையும் ஏற்படக்கூடாது என்பது அவர் கடைபிடித்த வலிமையான கொள்ளையாகும்.*

***மெய்ப்பொருளாரின் அன்புள்ளம் :***

*சிவனடியார் போன்ற வேடத்தில் தன்னை மறைத்துக் கொண்டிருந்த முத்தநாதனின் பாதகமான செயலைக் கண்ட தத்தன் அவனைத் தன் வாளால் வெட்ட முயன்றபோது மெய்ப்பொருளார் தத்தனைத் தம் கையை நீட்டி தத்தா! இவர் நமரரெனத் தடுத்தார். நமர் என்றால் நம்மவர் இ நம்மைச் சேர்ந்தவர் என்பது பொருள். "எதிர்பார்ப்பு ஏதுமின்றி மனத்தில் ஏற்பட்ட*

*உணர்ச்சிகளினால் ஒருவரின் துன்பத்தைப் போக்கும் விதமாக அன்பு செயல் ஆவதினால் அங்கே அதற்கெனத் தனி உருவம் தெரிய வருகின்றது.”* [14]*(திருமுறைகளில் பொதுமறை சில துளிகள்... - ந.தனபால், செல்லம் பதிப்பகம், 119/6 புரசைவாக்கம் நெடுஞ்சாலை செல்லீஸ், சென்னை ப – 80, பதிப்பு - சூன் 2020). வள்ளுவனாரும்,*

**“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புண்கண்ணீர் பூசல் தரும்;”** [15]

*(திருக்குறள் - 71)*

*எனத் தாம் அன்பு கொண்டோர் துன்பம் கொள்வதைக் கண்டால் துய்மையான உள்ளம் கொண்டவருக்குத் தாமாகவே தம் கண்களிலிருந்து கண்ணீர் பெறுகும் என திருவள்ளுவர் கூறியதைப் போல சிவவேடம் பூண்ட முத்;தநாதன் மேல் அன்பு கொண்ட மெய்ப்பொருளார் அவனைத் தத்தன் தாக்க வருகையில் மனம் கலங்கினார்.*

***முத்தநாதனைப் பாதுகாத்தல் :***

*தன்னைக் வாளால் குத்திய முத்தநாதனை ‘எம் மன்னனைக் கொன்ற பொய்யனைக் கொல்வோம்’ என்று அவனை மக்கள் சூழ்ந்து கொள்ளாதவாறு தடுத்து முத்தநாதனைப் பத்திரமாக நகரத்தை விட்டு வெளியே கொண்டு சென்று விட்டுவிட்டு வருமாறுக் கூறினார். தமது கொடிய பகைவருக்குத் துன்பம் உண்டானால் அவர் செய்த தீங்கினை மறந்து அவருக்கு மனமிறங்கி உதவுவர் மேன்மக்கள் என்பதனை,*

**“தெற்றப் பகைவர் இடரப்பாடு கண்டக்கர்**
**முற்றுங் கண்ணோடுவர் மேன்மக்கள்...”** [16]

*(பழமொழி நானூறு - 87)*

*எனும் பழமொழி நானூறு பாடல் கொண்டு அறியலாம்.*

*சிவப்பணியைத் தம் வாழ்வின் பயனாய்க் கொண்ட மெய்ப்பொருளார் முத்தநாதனின் குற்றத்தைப் பெரிதாய் எண்ணாது அவன்மீது கோபங்கொள்ளாது*

**“இறப்பச் சிறியவர் இன்னா செயினும்**
**பிறப்பினால் மாண்டார் வெகுளார்...”** [18]

*(பழமொழி நானூறு - 52)*

*எனும் பழமொழி நானூறு பாடலுக்கேற்ப முத்தநாதன் அணிந்தது பொய்த்தவவேடமாக இருப்பினும் அத்தவவேடத்தின் புனி;தத்தை அறிவுறுத்திப் அவனைப் பாதுகாத்திட்டார். முத்தநாதனை தத்தன் பத்திரமாகக் கொண்டுபோய் நகரின் எல்லையில் விட்டுவிட்டு வந்துவிட்டான் என்ற நற்சொல்லைக் கேட்டபின்னர் இறைவனை நினைந்தவண்ணம் தம் ஆருயிரை நீத்தார். மெய்ப்பொருளாரின் இறைபக்தியையும், அன்பையும், நல்லெண்ணத்தையும் கண்ட இறைவன் அவரைத் தம் அருளாகிய திருவடி நிழலை அடையும்படிச் செய்து என்றும் நீங்காத புகழை அவருக்கு வழங்கினார்.*

**முடிவுரை :**

தனிமனிதன் பெற்ற தனிப்பண்பான அன்பு அவனைச் சார்ந்த பலரின் துன்பம் நீக்கும் தூரிகையாக விளங்கும். அன்புள்ளம் கொண்ட மனம் என்றும் அறிவற்ற செயல்களில் ஈடுபடுவதில்லை என்பது ஆன்றோர் வாக்கு. அன்பை உயர்நிலையாகக் கெண்டு வாழ்பவர்கள் அடுத்து உயிர்களின் மீது அன்பு செலுத்துவதினால் பெறும் இன்பத்தையே ஈடில்லா மகிழ்ச்சியாக கொள்வார்கள் என்பது மெய்ப்பொருளாரின் வாழ்வில் உண்மையாயிற்று. துன்பம் வரும் வேளையிலும் தம்மைத் துதித்துப் போற்றும் மெய்யடியவர்களுக்கே இறைவன் அருள் புரிவான் என்பதை மெய்ப்பொருள் நாயன்மார் புராணம் நமக்கு எடுத்தோதுகிறது.

**தொகுப்புரை :**

- பண்டைக்காலந்தொட்டே இறைவழிபாடு என்பது தமிழ்மக்களிடம் இருக்கிறது.
- பூசையும் துறவி வேடமும் மட்டும் ஒருவரைத் தூய்மையானவராகக் காட்டாது. அவரின் நல்லெண்ணம் நற்செய்கை அன்பும் கருணையும் தூய பக்தியும் தான் ஒருவரை தூய்மையானவராகக் காட்டும்.
- சைவப் பெரியவர்கள் அன்பையும் சிவனையும் ஒன்றே எனக் கருதி பிறர்மீது அன்பு காட்டுவது சிவனை அடையும் சிறந்த செறி எனும் சமயப் பண்பாட்டைப் பெற்றவர்களாய் வாழ்ந்தனர்.
- அல்லும் பகலும் அவன்தாள் சார்ந்து வாழும் அடியவர்களுக்கெல்லாம் ‘மெய்ப்பொருள்’ என்பது சைவர்கள் தங்கள் மேனியிலணிந்த திருநீறும் அவர்கள் களிப்பிற்காக அணியும் அணிகளுமே ஆகும்.
- மெய்ப்பொருளார் தம் பெயருக்கேற்ப மெய்யன்பு உடையவராக வாழ்ந்து உலக மக்கள் யாவருக்கும் மெய்யன்பின்(உண்மயான) உதாரணமாகத் திகழ்ந்துள்ளார்.

**துணைநூற்பட்டியல் :**


1. சேக்கிழார் - பெரியபுராணம்
வர்த்தமானன் பதிப்பகம், 21, இராமகிருஷ்ணா தெரு,
தியாகராய நகர், சென்னை - 600 017. இரண்டாம் பதிப்பு: 2009
2. வள்ளலார் - திருவருட்பா
சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்,தென்னாற்காடு - 607 303
முதல் பதிப்பு - 1982
3. புலவர் ம. இராசமாணிக்கம் - பழமொழி நானூறு
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் , 522, டி.டி.கே சாலை, ஆள்வார் பேட்டை,சென்னை - 600018.மறு பதிப்பு: 2007

4. பரிமேலழகர் - திருக்குறள்
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் , 522, டி.டி.கே சாலை, ஆள்வார் பேட்டை, சென்னை - 600018. மறு பதிப்பு: 2007

5. முனைவர் கதிர்முருகு - நீதி வெண்பா மூலமும் உரையும்
சாரதா பதிப்பகம்

6. பாரதியார் - பாரதியார் கவிதைகள்
மணிவாசகர் பதிப்பகம், சிங்கர் தெரு, சென்னை - 18